வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu


Email : eelanaduweekly@gmail.com

மலர் : 07 06.04.2026 திங்கட்கிழமை இதழ் : 90 பக்கங்கள் : 08




## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து உண்மை வெகுவிரைவில் வெளிவரும்

### வவுனியாவில் கூறினார் ரில்வின் சில்வா



கொழும்பு, ஏப். 06

உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதல்கள் குறித்த உண்மை வெகுவிரைவில் வெளிவரும் என மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தள்ளார்.

வவுனியாவில் நேற்று நடைபெற்ற 55 ஆவது ஏப்ரல் வீரர்கள் ஞாபகார்த்த நிகழ்வில் கலந்துக்கொண்டு உரையாற்றுகையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டை வங்குரோத்து நிலைக்குத் தள்ளியவர்கள் இன்று பொருளாதார மேம்பாடு பற்றி பேசுகிறார்கள்.

பொருளாதார பாதிப்பில் இருந்து மீள்வதற்கு கடுமையாக செயற்படவேண்டும். அனைவரும் அதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும். நாட்டை வங்குரோத்து நிலைக்கு தள்ளிய எதிர்க்கட்சியினர் இன்று அரசாங்கத்துக்கு எதிராக ஒன்றிணைந்துள்ளார்கள்.

இன்று தூய்மையானவர்களை போன்று ஊழலுக்கு எதிராக பேசுகிறார்கள். ஒரு குடும்பத்தின் ஊழல் மோசடியால் நாடு வங்குரோத்து நிலையடைந்தது என்பதை உயர்நீதிமன்றம் 07

## ஈஸ்டர் தாக்குதல்கள் நடைபெற்று 7 ஆண்டுகள் கடந்தும் நீதியில்லை



### எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 06

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்று ஏழு ஆண்டுகள் நிறைவடைந்துள்ள போதிலும், பாதிக்கப்பட்டவர்களுக்கு இன்னும் நீதி வழங்கப்படவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.


நேற்று விடுத்துள்ள ஈஸ்டர் தினச் செய்தியில் அவர் இதனைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

உயிர்த்த ஞாயிறு என்பது நம்பிக்கை மற்றும் புதிய ஆரம்பங்களைக் குறிக்கும் ஒரு புனித நாள் என்ற போதிலும், 2019 ஆம் ஆண்டு தேவாலயங்கள் மற்றும் ஹோட்டல்களை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தற்கொலைத் குண்டுத் தாக்குதல்களின் வடுக்கள் இன்னும் மாறவில்லை.

இந்தத் கொடூரத் தாக்குதலில் உயிரிழந்தோர், 07

## போர் முடிவுக்கு வரவேண்டும்! பரிசுத்த பாப்பரசர் வலியுறுத்தல்



வத்திக்கான் சிற்றி, ஏப். 06

போரைத் தொடங்கிய நாடுகள் அதை முடிவுக்குக் கொண்டு வருமாறு பரிசுத்த பாப்பரசர் லியோ வலியுறுத்தியுள்ளார்.

வத்திக்கான் புனித பேதுரு பேராலயத்தில் நடைபெற்ற இரவுத் திருப்பலி ஆராதனையில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

உலகம் முழுவதும் பரவிவரும் மோதல்களின் வீச்சைக் கண்டு மக்கள் உணர்ச்சியற்றுப் போகாமல், அமைதிக்காகப் பாடுபடவேண்டும்.

போர், அநீதி மற்றும் மக்களையும் நாடுகளையும் தனிமைப்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் அவநம்பிக்கையும் அச்சமும் நமக்கிடையேயான பிணைப்புகளைத் துண்டிக்க அனுமதிக்கப்பட்டுள்ளன. நாடுகள் முடங்கிப் போக அனுமதிக்க வேண்டாம் என்றும் புனித பாப்பரசர் லியோ வலியுறுத்தல் விடுத்துள்ளார். (அ)

## பல உலகத் தலைவர்கள் சுயநலம் கொண்டவர்கள்

### கொழும்பு பேராயர் மல்கம் ரஞ்சித்



கொழும்பு, ஏப். 06

இன்று உலகை ஆளும் பல தலைவர்கள் சேவகர்களாக இல்லாமல், அதிகாரத்தை விரும்புபவர்களாகவும், சுயநலம் கொண்டவர்களாகவும் இருக்கின்றனர் என கொழும்பு பேராயர் கர்தினால் 07

## எரிபொருள் கப்பலை இலங்கைக்கு வழங்குவதற்கு சீன அரசு இணக்கம்

கொழும்பு, ஏப். 06

சுத்திகரிக்கப்பட்ட எரிபொருள் தாங்கிய கப்பலொன்றை இலங்கைக்கு வழங்குவதற்கு சீன அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளதாக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் இன்று விசேட கலந்துரையாடலொன்று நடைபெறவுள்ளதாக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் குறிப்பிட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலின்போது, இலங்கைக்கு வழங்கப்படவுள்ள எரிபொருள் வகை மற்றும் சம்பந்தப்பட்ட கப்பல் நாட்டை வந்தடையும் 07

## 2500 மருத்துவர்களுக்கு தட்டுப்பாடு!

கொழும்பு, ஏப். 06

நாட்டில் தற்போது சுமார் 2000 முதல் 2500 வரையான மருத்துவர்களுக்கான தட்டுப்பாடும், ஏறத்தாழ 1000 நிபுணத்துவ மருத்துவர்களுக்கான தட்டுப்பாடும் நிலவுகிறது. இந்த இக்கட்டான நிலைமை தொடர்பில் கவனத்தில் கொள்ளாத அராசங்கம், சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு ஏற்ப நாட்டின் சுகாதாரத் துறையைத் தனியார் மயமாக்குவதற்கான ஒரு திட்டமிட்ட சதியை முன்னெடுத்து வருவதாக சிவில் உரிமைகளுக்கான மருத்துவர் சங்கத்தின் தலைவர் வைத்தியர் சமல் சஞ்சீவ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்-

பயிற்சியை முடித்த மருத்துவர்களைப் பணியில் அமர்த்துவது தொடர்பாகச் சுகாதார அமைச்சர் விடுத்துள்ள எச்சரிக்கையானது ஒட்டுமொத்தத் 07

### மருத்துவர்கள் போராட்டம்

## சுகாதார அமைச்சருக்கு இன்று வரை அவகாசம்

கொழும்பு, ஏப். 06

வைத்தியர்களின் பணிப்புறக்கணிப்பை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்கு, சுகாதார அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸவுக்கு இன்று காலை 8.00-மணி வரை அவகாசம் வழங்குவதாக அரச வைத்திய அதிகாரிகளின் சங்கம் தெரிவித்துள்ளது.

சம்பந்தப்பட்ட பிரச்னைகள் குறித்து 07

## எரிவாயு விலை எகிறியது!

கொழும்பு, ஏப். 06

நேற்று நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில், லிட்ரோ சமையல் எரிவாயு கொள்கலன்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாக அந்த நிறுவனத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இதன்படி, 12.5 கிலோ கிராம் நிறையுடைய சமையல் எரிவாயு கொள்கலனின் விலை 775 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய அதன் புதிய 4,4765 ரூபாயாகும் 5 கிலோ கிராம் நிறையுடைய சமையல் எரிவாயு கொள்கலனின் விலை 1602 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன் புதிய 1,910 ரூபாயாகும். 07

## சொத்து விவரம் சமர்ப்பிக்க மகிந்தவுக்கு அவசர உத்தரவு!

கொழும்பு, ஏப். 06

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது குடும்பத்தினரின் 2010 முதல் 2015 வரையான காலப் பகுதிக்குரிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பான விவரங்களை சத்தியக்கடதாசி மூலம் சமர்ப்பிக்குமாறு இலஞ்ச ,ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்யும் ஆணைக்குழு உத்தரவிட்டுள்ளது.

எதிர்வரும் ஏப்ரல் 10 ஆம் திகதிக்கு முன்னர் இந்தச் சொத்து விபரப் பிரகடனத்தைச் சமர்ப்பிக்க வேண்டும் என ஆணைக்குழு 07

## புத்தாண்டு விசேட போக்குவரத்து வியாழக்கிழமை முதல் ஆரம்பம்!

கொழும்பு, ஏப். 06

எதிர்வரும் சித்திரைப்புத்தாண்டை முன்னிட்டு, பொது மக்களின் நலன் கருதி விசேட பஸ் மற்றும் ரயில் சேவைகள் எதிர்வரும் 9ஆம் திகதி வியாழக்கிழமை முதல் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் சஜீவ கனகரத்ன இது குறித்துத் தெரிவிக்கையில்- புத்தாண்டு காலப்பகுதிக்காக சுமார் 1500 மேலதிக பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். 07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உண்மைகள் புனிதமானவை, கருத்துக்கள் சுதந்திரமானவை

# அனைத்து பிரச்னைகளுக்கும் தீர்வு வழங்க அரசால் முடியும்

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 06

அனைத்து பிரச்னைக ளுக்கும் தீர்வு வழங்கும் ஆற்றல் அரசாங்கத்திடம் உள்ளது என்று சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பல பிரச்னைகளுக்கு தீர்வுகள் வழங்கப்பட்டுள்ளன. ஏனைய பிரச்னைகளுக்கும் எதிர்காலத்தில் தீர்வுகள் கிடைக்கும் என்பதை அவர்கள் அறிவார்கள் என்றும் அமைச்சர் கூறினார்.

தற்போது பணிப்பகிஷ்க ரிப்பில் ஈடுபட்டுள்ள மருத்து வர்களுக்கான நியமனங்கள் தொடர்பான பிரச்னைகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. இந்த நியமனங்களுக்காக 453 மருத்துவர்களில் 435 பேர் விண்ணப்பித்துள்ளனர்.

தற்போது இதற்கான பட் டியல் தயாரிக்கப்பட்டு வரு வதாகவும், விரைவில் அது வெளியிடப்படும் என்றும் அவர் கூறினார். சித்திரை புத்தாண்டுக்கு முன்னர் இந்த மருத்துவர்களுக்கான முதற் கட்ட நியமனங்கள் வழங் கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.



கொழும்பில் நேற்று நடை பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ)

இலங்கை நிலப்பரப்புக்கு நேரே

# சூரியன் உச்சம் கொடுக்கும் காலம் நேற்றுடன் ஆரம்பம்!

கொழும்பு, ஏப். 06

சூரியனின் தெற்கிலிருந்து வடக்கு நோக்கிய நகர்வு கார ணமாக, ஏப்ரல் 05ஆம் திகதி முதல் 15ஆம் திகதி வரை இலங்கை நிலப்பரப்புக்கு நேரே சூரியன் உச்சம் கொடுக்கும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

திணைக்களத்தின் தரவுக ளின்படி, நண்பகல் 12: 13 மணியளவில் தொட்டந்துவ, ரத்கம, யக்கலமுல்ல, அக்கு ரஸ்ஸ, முல்கிரிகல, ரன்ன, கல மெட்டிய, உஸ்ஸன்கொட ஆகிய பகுதிகளில் சூரியன் மிக நெருக்கமாக உச்சம் கொடுக் கும் என்று எதிர்பார்க்கப்ப டுகிறது.

இந்த காலப்பகுதியில் நில வும் அதிக வெப்பம் காரணமாக பொதுமக்கள் அவதானத்துடன் இருக்குமாறு அறிவுறுத்தப்படு கிறார்கள். (எ)

டிஜிற்றல் சேவைகள் மீதான

# 18 வீத வற் வரி விதிப்பு மீண்டும் ஒத்திவைப்பு

கொழும்பு, ஏப். 06

டிஜிற்றல் சேவைகளுக்கான 18 சதவீத பெறுமதி சேர்க்கப் பட்ட வரி விதிப்பை எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி வரை அரசாங்கம் மீண்டும் ஒத்தி வைத்துள்ளது என்று உள் நாட்டு இறைவரி திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் இறைவ ரித் திணைக்களத்தின் ஆணை யாளர் நாயகம் மேலும் தெரி விக்கையில், பெறுமதி சேர்க் கப்பட்ட வரிச் சட்டத்தில் மேற்கொள்ள இருக்கும் உத்தியோகபூர்வ திருத்தங்கள் முழுமையாக நிறைவேற்றப்ப டும் வரை, இந்த வற் வரி அறவீடு நிறுத்தி வைக்கப்படும்.

சிறப்பு வர்த்தமானியில் குறிப்பிட்டதன்படி, டிஜிற்றல் சேவைகள் மீதான இந்த வரியை, கடந்த ஆண்டு ஒக்ரோபர் முதலாம் திகதி முதல் நடைமுறைப்படுத்தத் திட்டமிடப்பட்டிருந்தது. பின்னர், விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் ஏப்ரல் முதலாம் திகதிக்கு ஒத்திவைக் கப்பட்டது.

தற்போது மீண்டும் மூன்று மாதங்களுக்கு ஒத்திவைக்கப் பட்டு, ஜூலை முதல் நடைமு றைக்கு வரும் என்று அறிவிக் கப்பட்டுள்ளது. (எ)

## ஆறு மாகாணங்களுக்கு கடும் மின்னல் தாக்கம்

கொழும்பு, ஏப். 06

மத்திய, சப்ரகமுவ, ஊவா, தென் மற்றும் வடமத்திய மாகா ணங்களுக்கும் அம்பாறை மாவட் டத்துக்கும் கடும் மின்னல் தாக் கம் குறித்த எச்சரிக்கை அறி விப்பு ஒன்றை வளிமண்டலவி யல் திணைக்களம் விடுத்துள்ளது.


மேற்கூறிய பகுதிகளில் சில இடங்களில் பிற்பகல் 02. 00 மணிக்குப் பின்னர் இடியுடன் கூடிய மழை பெய்யும்போது பலத்த மின்னல் தாக்கம் ஏற்ப டுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகமாக காணப்படுகின்றன.

அப்பகுதிகளில் தற்காலி கமாக பலத்த காற்று வீசக்கூடும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

முன்னெச்சரிக்கை நடவடிக் கைகளை மேற்கொள்ளுமாறு வளி மண்டலவியல் திணைக்களம் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது. (எ)

யாழில் மக்களுக்கு இடையூறாக

# வீதியில் வைத்து மரக்கறிகளை இறக்கியவருக்கு எச்சரிக்கை



யாழ்ப்பாணம், ஏப். 06

தொடர்ந்து மக்க ளுக்கு இடையூறாக வீதியில் வைத்து வாகனத்தில் இருந்து மரக்கறி களை இறக் கிய வியாபாரியை கடுமையாக எச்சரித்த பின்னர் பொலிஸார் விடுவித்தனர்.


குறித்த நபர் தம் புள்ளையில் இருந்து மரக்கறிகளை கொண்டு வரும் வாகனத்தை வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் ஆளு கைக்குட்பட்ட சித்தங்கேணி சிவன்கோவில் வீதியில் வைத்து, மரக்கறிகளை இறக்கி தனது வியாபார செயல் பாட்டுக்காக கொண்டு செல்வதை வழக்க மாக கொண்டிருந்தார்.

இதனால், அந்த வீதியால் போக்குவரத்து நடவடிக்கை களில் ஈடுபடுபவர்களுக்கு இடையூறு ஏற்பட்டது. இந்த நிலையில் நேற்று, வலிகாமம் மேற்கு பிரதேச சபை தவிசாளர் ச. ஜயந்தன் நேரில் சென்று பார் வையிட்டதுடன் வட்டுக் கோட்டை பொலிஸாருக்கு தகவல் வழங்கினார்.

சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் குறித்த வியாபா ரியை, இனிமேல் இவ்வாறு மக்களுக்கு இடையூறாக செயல் படக் கூடாது என்று கடுமை யாக எச்சரித்த பின்னர் விடுவித் தனர். (எ-05)

# மன்னார் செபஸ்தியார் பேராலயத்தில் உயிர்த்த ஞாயிறு நள்ளிரவு திருப்பலி





மன்னார், ஏப். 06

இயேசு கிறிஸ்து சிலுவை யில் அறையப்பட்டு, மூன்றாம் நாள் மரணத்தை வென்று உயிர்த்தெழுந்ததை நினைவு கூரும் வகையில் உலகம் முழுவ தும் உயிர்த்த ஞாயிறு பெரு விழா நேற்று கொண்டாடப் பட்டது.

இதனை முன்னிட்டு, சனிக்கிழமை இரவு நாடளாவிய ரீதியில் உள்ள தேவாலயங்க ளில் விசேட நள்ளிரவு திருப்ப லிகள் நடைபெற்றன.

மன்னார் மாவட்டத்திலும் பல்வேறு தேவாலயங்களில் வழிபாடுகள் நடைபெற்ற தோடு, தேவாலயங்களைச் சூழப் பாதுகாப்பு பலப்படுத்தப் பட்டிருந்தது.

மன்னார் தூய செபஸ்தியார் பேராலயத்தில் உயிர்ப்பு பெருவிழா நள்ளிரவு திருப்பலி நேற்று முன்தினம் இரவு 11.15 மணிக்கு ஆரம்பமானது.

மன்னார் மறைமாவட்ட ஆயர் அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் இந்தத் திருவிழா திருப்பலி கூட்டுத் திருப்பலி யாக ஒப்புக்கொடுக்கப்பட்டது.

ஆயிரக்கணக்கான மக்கள் பக்திப்பரவசத்துடன் கலந் துகொண்ட இந்தத் திருப்ப லியின் போது, அசம்பாவிதங் களைத் தவிர்க்கும் பொருட்டு தேவாலயத்தைச் சூழ பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய் யப்பட்டிருந்தன. (எ)

# போதைப்பொருட்களுடன் மேலும் 906 பேர் சிக்கினர்

கொழும்பு, ஏப். 06

ஜனாதிபதியின் பணிப்பு ரைக்கமைய, நாட்டில் போதைப் பொருளை தடுக்கும் நோக்கி லான “முழு நாடுமே ஒன்றாக” எனும் தேசிய திட்டத்தின் கீழ், சனிக்கிழமை பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளில் 906 பேர் போதைப்பொருட்களுடன் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு நேற்று தெரிவித்துள்ளது.

அத்துடன், தடுப்புக்காவல் உத்தரவு பெற்ற 15 பேரும் சட் டவிரோத சொத்துக்கள் தொடர் பான விசாரணைகளுக்கமைய 12 பேரும் கைது செய்யப்பட் டனர். இதேவேளை, 911 சோத னைகள் நடத்தப்பட்டன.

இதற்கமைய, சந்தேக நபர் களிடமிருந்து 409 கிராம் ஹெரோயின், 726 கிராம் ஐஸ், 25 கிலோ 993 கிராம் கஞ்சா, 2,689 கஞ்சா செடிகள், 92 மில்லி கிராம் குஷ் ரக போதைப்பொருள், 112 கிராம் ஹஷீஷ் ரக போதைப்பொருள், 23, 093 போதை மாத்திரைகள், 05 கிலோ 478 கிராம் மதனமோ தகம் மற்றும் 409 கிராம் மாவா போதைப்பொருள் என்பன கைப் பற்றப்பட்டன என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu
06.04.2026 திங்கட்கிழமை
விசுவாவசு வருடம், பங்குனி 23

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## மாகாணசபை தேர்தல்களும் தென்னிலங்கை எதிரணிக் கட்சிகளும்

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு எதிராக பொதுவான அணியொன்றை அமைப்பதற்கான எதிரணி அரசியல் கட்சிகளின் முன்னெடுப்புகள் வெறுமனே அவ்வப்போது கூட்டாக செய்தியாளர்கள் மகாநாடுகளை நடத்துவதுடன் மட்டுப்படுத்தப்பட்டவையாகவே அமைந்து விடுகின்றன.

கடந்த வருடம் ஓகஸ்ட் பிற்பகுதியில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்படும் வரை அரசாங்கத்துக்கு எதிராக கிளம்புவதற்கு ஒரு பிரச்சினைக்காக எதிரணிக் கட்சிகள் காத்திருக்க வேண்டியிருந்தது. அரசாங்கத்தை விமர்சிப்பதற்காக அவ்வப்போது எழுகின்ற பிரச்னைகளைப் பயன்படுத்துவதே இந்த கட்சிகளின் ஒரு பலவீனமான தந்திரோபாயமாக இருந்து வருகிறது.

அரசாங்கத்துக்கு எதிராக உருப்படியான எதிர்ப்பியக்கம் ஒன்றைக் கட்டியெழுப்பவதற்கு மக்களின் கவனத்தை தூண்டக்கூடியதாக ஒரு அணுகுமுறையைக் கடைப்பிடிக்க எதிரணிக் கட்சிகளினால் இதுவரையில் இயலாமல் இருக்கிறது.

மத்திய கிழக்கில் ஈரானுக்கு எதிராக அமெரிக்காவும் இஸ்ரேலும் நடத்திவரும் போர் ஆக்கிரமிப்புப் போரை தங்களுக்கு வாய்ப்பாக பயன்படுத்துவதில் இந்த கட்சிகள் தற்போது முனைப்புக் காட்டுகின்றன. என்றாலும், இந்த போரின் விளைவாக இலங்கை அனுபவிக்க வேண்டியிருக்கின்ற நெருக்கடிகள் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்கு மாத்திரமல்ல, எந்த கட்சியின் அரசாங்கமாக இருந்தாலும், அதன் கட்டுப்பாட்டுக்கும் அப்பாற்பட்டவையாக இருப்பதால் எதிரணி கட்சிகளின் விமர்சனங்கள் மக்கள் மத்தியில் எடுபடுவதாக இல்லை.

மாகாண சபை தேர்தல்களை அரசாங்கம் விரைவாக நடத்த வேண்டும் என்ற கோரிக்கையையும் இந்த கட்சிகள் இடைக்கிடை முன்வைப்பதுண்டு. அரசாங்கத்துக்கு எதிராக பேசுவதற்கு வேறு ஏதாவது பிரச்னை கைவசம் இல்லையென்றால் மாத்திரம் தான் மாகாண சபை தேர்தல்கள் மீது அவர்கள் கவனத்தைத் திருப்புகிறார்கள் போன்று தெரிகிறது.

பல வருடங்களாகத் தாமதிக்கப்பட்டுவரும் தேர்தல்களை நடத்தி மாகாணங்களின் நிருவாகங்கள் மக்கள் பிரதிநிதிகளிடம் கையளிக்கப்பட வேண்டும் என்ற ஜனநாயக அக்கறையை விடவும் அந்த தேர்தல்களில் தேசிய மக்கள் சக்தி பெரும் பின்னடைவைச் சந்திக்கும் என்ற எதிர்பார்ப்பே மாகாண சபை தேர்தல்கள் தொடர்பான எதிரணிக் கட்சிகளின் அந்த அக்கறைக்கு காரணமாக இருக்கிறது என்பதில் சந்தேகமில்லை.

தேர்தல்கள் நடத்தப்பட்டு மாகாண சபைகள் அமைக்கப்பட்டாலும் கூட, அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தவேண்டும் என்று இந்த கட்சிகள் வலியுறுத்தும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. மாகாண சபைகளை தேர்தல்கள் மற்றும் 13 ஆவது திருத்தம் தொடர்பில் தென்னிலங்கை அரசியல் சமுதாயத்தினதும் வடக்கு, கிழக்கு தமிழ் அரசியல் சமுதாயத்தினதும் பார்வைகள் அடிப்படையில் வேறுபட்டவையாகவே இருக்கின்றன.

பதவிக்கு வந்ததும் ஒரு வருடகாலத்திற்குள் மாகாண சபை தேர்தல்களை நடத்துவதாக தேர்தல் விஞ்ஞாபனங்களில் வாக்குறுதியளித்த தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு நெருக்குதலைக் கொடுப்பதற்கு தென்னிலங்கை எதிரணியும் தமிழ்க் கட்சிகளும் பொதுவான அணுகுமுறையை கடைப்பிடிக்க இணாங்க முடியுமானால் பயனுடையதாக இருக்கும்.

தேர்தல்களை மேலும் தாமதிப்பது சகல சமூகங்களினதும் ஜனநாயக உரிமைகளை மீறும் செயல். இதை அடிப்படையாகக் கொண்டு இந்த பிரச்சினையைக் கையாண்டால் மாகாண சபை தேர்தல்களை நடத்துவதற்கு அரசாங்கத்தை நிர்ப்பந்திக்க தென்னிலங்கையிலும் வடக்கு, கிழக்கிலும் பொதுவான நிலைப்பாட்டுக்கு வருவதில் சிரமம் இருக்காது.

# ஈரானில் பெரும் கதிர்வீச்சு கசிவு ஏற்படும் அபாயம்!

### ஐ. நாவுக்கு அவசர கடிதம்

தெஹ்ரான், ஏப். 06

ஈரானின் ஒரே செயல்பாட்டு அணுமின் நிலையமான புஷெர் அணுமின் நிலையத்தை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தாக்குதல்களால் பெரும் கதிர்வீச்சு கசிவு ஏற்படும் அபாயம் உள்ளது என்று ஈரான் அதிர்ச்சியூட்டும் எச்சரிக்கையை விடுத்துள்ளது.

ஈரானின் புஷெர் அணுமின் நிலையத்துக்கு அருகே அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் படைகள் இணைந்து தாக்குதல் நடத்தின. அணுசக்தி நிலையத்துக்கு மிக அருகில் இத்தகைய இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பது சர்வதேச அளவில் பெரும் பதற்றத்தை உருவாக்கியுள்ளது.

இந்தத் தாக்குதல் தொடர்பில் ஈரான் வெளிவிவகாரத்துறை அமைச்சர் அப்பாஸ் அராக்ஷி, ஐ.நா. பொதுச்செயலாளர் அந்தோனியோ குட்டெரெஸிற்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அந்த கடிதத்தில் அவர், இந்த தாக்குதலின் காரணமாக அணுமின் நிலையத்தில் கதிர்வீச்சு கசிவு ஏற்படும் நேரடி அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்றும் அணுசக்தி நிலையங்கள் மீதான இத்தகைய தாக்குதல்கள் ஈரான் நாட்டை மட்டும் பாதிக்காது, ஒட்டுமொத்த மத்திய கிழக்கு பிராந்தியத்துக்கும் மனித மற்றும் சுற்றுச்சூழல் ரீதியாக மிகப்பெரிய பேரழிவை ஏற்படுத்தும் எனவும் இத்தகைய நடவடிக்கைகள் சர்வதேச பாதுகாப்பு விதிகளுக்கு முரணானது என்பதையும் அவர் அதில் சுட்டிக்காட்டியுள்ளார்.

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் ஏற்கனவே போர் மேகங்கள் சூழ்ந்துள்ள நிலையில், ஈரானின் இந்த எச்சரிக்கை உலக நாடுகளிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

(எ)

# தெஹ்ரான்மீது நடந்த தாக்குதல்களில் ஈரானிய இராணுவத் தளபதிகள் பலி!

### அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் அறிவிப்பு

வாஷிங்டன், ஏப். 06

தெஹ்ரான் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களில், ஈரானை தூரநோக்கற்ற முறையில் வழிநடத்திய பல இராணுவத் தளபதிகள் கொல்லப்பட்டனர் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்தார்.

அவர் தனது சமூக வலைத்தளப் பக்கத்தில் பதிவிட்டுள்ள குறிப்பொன்றிலேயே இவ்வாறு குறிப் பிட்டார். தெஹ்ரான் மீது நடத்தப்பட்ட கடுமையான தாக்குதல்களில் மேலும் பல இலக்குகள் அழிக்கப்பட்டன.

உடன்படிக்கைகளுக்கு வருவதற்கு அல்லது ஹோர்முஸ் நீரிணையைத் திறப்பதற்கு டொனால்ட் ட்ரம்ப் ஈரானுக்கு வழங்கிய 48 மணி நேரக் காலக்கெடு முடிவடைவதற்கு முன்னரே இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன என்று வெளிநாட்டு ஊடக அறிக்கைகள் சுட்டிக்காட்டின.

எவ்வாறாயினும், இந்தத் தாக்குதல் தொடர்பில் ஈரான் அரசாங்கம் இதுவரையில் எந்தவித உறுதிப்படுத்தலையும் அல்லது மறுப்பையும் வெளியிடவில்லை.

இதேவேளை, குவைத் நாட்டில் உள்ள மின்சாரம் மற்றும் நீர் உற்பத்தி நிலையங்களை இலக்கு வைத்து ஈரான் தொடர்ச்சியான தாக்குதல்களை நடத்தியுள்ளது.

(எ)

# அமெரிக்க போர் விமானி எங்களுக்கு கைதி அல்ல

### ஈரான் மனிதாபிமான அறிக்கை

தெஹ்ரான், ஏப். 06

வளைகுடா பிராந்தியத்தில் போர் பதற்றம் உச்சத்தை எட்டியுள்ள சூழலில், ஈரானிடம் பிடிபட்டுள்ள அமெரிக்க போர் விமானி குறித்து அந்த நாடு வெளியிட்டுள்ள மனிதாபிமான அறிக்கை சர்வதேச கவனத்தை ஈர்த்துள்ளது.

தனது மகன் ஈரானியப் படைகளால் சிறைபிடிக்கப்பட்டதை தொடர்ந்து, அந்த அமெரிக்க விமானியின் தாயார் தனது கவலையையும் மகனை விடுவிக்கக் கோரும் மன்றாட்டத்தையும் எக்ஸ் சமூக வலைத்தளத்தில் பதிவிட்டிருந்தார். ஒரு தாயின் உருக்கமான இந்த வேண்டுகோள் உலகம் முழுவதும் பரவலான அதிர்வை ஏற்படுத்தியது.

விமானியின் தாயாரின் பதிவுக்குப் பதிலளிக்கும் வகையில் ஈரான் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில், "எங்களிடம் உள்ள அமெரிக்க விமானியை நாங்கள் ஒரு கைதியாகப் பார்க்கவில்லை. மாறாக அவரை எங்கள் நாட்டு விருந்தினராகவே கருதுகிறோம்" என ஈரான் தெரிவித்துள்ளது.

போர்ச் சூழலிலும் ஒரு தாயின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து, ஈரானியர்கள் தங்களின் மனிதாபிமான பண்பை வெளிப்படுத்தியுள்ளனர் என்று பல்வேறு தரப்பினரும் கருத்து வெளியிட்டு வருகின்றனர். இந்த அறிவிப்பு, இரு நாடுகளுக்கும் இடையே நிலவும் கடுமையான இராஜதந்திர மோதல்களுக்கு மத்தியில் ஒரு சிறிய நிம்மதியை ஏற்படுத்தியுள்ளது.

(எ)

# ஈரானில் விழுந்த அமெரிக்க போர் விமானி மீட்கப்பட்டார்

வாஷிங்டன், ஏப். 06

ஈரானால் சுட்டு வீழ்த்தப்பட்ட அமெரிக்க போர் விமானத்தில் பயணித்து மாயமாகியிருந்த விமானி மீட்கப்பட்டார் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தனது சமூக வலைத்தளப் பதிவில் தெரிவித்துள்ளார்.

இந்த மீட்பு நடவடிக்கையின் போது இரு தரப்புக்கும் இடையே கடுமையான துப்பாக்கிச் சண்டைகள் இடம்பெற்றன. கடந்த வெள்ளிக்கிழமை எவ்-15 ஈ வகை போர் விமானம் விழுந்து நொறுங்கியதை தொடர்ந்து, அமெரிக்கா மிக விரைவான தேடுதல் மற்றும் மீட்புப் பணியைத் தொடங்கியது.

இதேவேளை, "எதிரி நாட்டு விமானியை" பிடித்து ஒப்படைப்பவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும் என்று ஈரான் அறிவித்திருந்தது. மீட்கப்பட்ட விமானி காயமடைந்த போதிலும் அவர் குணமடைந்து விடுவார் என்றும், ஈரானின் கரடு முரடான மலைப்பாங்கான பகுதியில் அவர் இருந்ததாகவும் ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




**மேடம்** உங்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். ஆடை ஆபரணங்கள் புதிதாக வாங்குவீர்கள். கல்யாணப் பேச்சுவார்த்தை சாதகமாக முடிவடையும்.

**இடபம்** எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர்கள் நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**மிதுனம்** புதிய திட்டங்களை தீட்டுவீர்கள். பிள்ளைகளின் உத்தியோகம் உயர் கல்வி பற்றி யோசிப்பீர்கள். அநாவசிய செலவுகளை கட்டுப்படுத்துவீர்கள். கனவு நனவாகும் நாள்.

**கடகம்** பழைய பிரச்னைகளுக்கு சுமூக தீர்வு காண்பீர்கள். தாயாருடன் வீண் விவாதம் வந்து போகும். எதிர்பாராத செலவுகள் வந்தாலும் எதிர்பார்த்த பணம் வந்து சமாளிப்பீர்கள்.

**சிம்மம்** கம்பீரமாக பேசி சில காரியங்களை முடிப்பீர்கள். உடன்பிறந்தவர்களால் பயனடைவீர்கள். விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். அரசால் ஆதாயம் உண்டு. வாகனத்தை சீர் செய்வீர்கள்.

**கன்னி** கடந்த இரண்டு நாட்களாக கணவன்- மனைவிக்குள் இருந்து வந்த பிரச்சினைகள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். இழுபறியாக இருந்த வேலைகள் முடியும். புது அத்தியாயம் தொடங்கும் நாள்.

**துலாம்** ராசிக்கு சந்திரன் இருப்பதாலும் ஓய்வின்றி உழைக்க வேண்டி இருக்கும். அதிக வேலைச்சுமையால் அவ்வப்போது கோபப்படுவீர்கள். நேர் மறை எண்ணங்கள் தேவைப்படும் நாள்.

**விருச்சிகம்** எளிதாக முடிய வேண்டிய விஷயங்கள் கூட பல முறை போராடி முடிப்பீர்கள். பிள்ளைகளை உணர்வுகளை புரிந்து கொள்ளுங்கள். நிதானம் தேவைப்படும் நாள்.

**தனுசு** கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். உறவினர் நண்பர்களால் அனுகூலம் உண்டு. வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். மதிப்புக் கூடும் நாள்.

**மகரம்** உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். பிள்ளைகளால் மதிப்பு கூடும். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். நெருங்கியவர்களுக்காக மற்றவர்களின் உதவியை நாடுவீர்கள்.

**கும்பம்** கடந்த இரண்டு நாட்களாக இருந்த அலைச்சல் நீங்கும். குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். பணப் புழக்கம் கணிசமாக உயரும். சில வேலைகளை விட்டுக் கொடுத்து முடிப்பீர்கள்.

**மீனம்** சந்திராஷ்டமம் இருப்பதால் சில முக்கிய அலுவல்களை மற்றவர்களை நம்பி ஒப்படைக்காமல் நீங்களே செய்து முடிக்கப்பாருங்கள். பொறுமை தேவைப்படும் நாள்.

# காட்டு யானைகள் அட்டகாசம்! பல தென்னை மரங்கள் நாசம்

வவுனியா, ஏப். 06

வவுனியா- மரக்காரம்பளை கிராமத்தில் நேற்று முன்தினம் இரவு தோட்ட நிலத்துக்குள் புகுந்த காட்டு யானைகள் காய்க்கும் நிலையில் இருந்த பெருமளவு தென்னை மரங்களையும் வாழைகளையும் சேதமாக்கின.

நேற்று முன்தினம் இரவும் குறித்த கிராமத்தினுள் புகுந்த யானைகள் காய்க்கும் நிலையில் இருந்த 18 தென்னைகளையும், ஐம்பதுக்கும் மேற்பட்ட வாழைகளையும் நாசமாக்கின.

நகரின் எல்லைக் கிராமமான குறித்த கிராமத்தில் யானைகளின் தொல்லை காணப்படாத நிலையிலே குறித்த சம்பவம் இடம்பெற்றது. இதனால்,



கிராம மக்கள் பெரும் அச்சத்துக்கு மத்தியில் வாழும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில், தமது கிராமத்தை சூழ யானை தடுப்பு வேலி அமைத்து தருமாறு கிராம மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-10)

# அனைத்து எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்களும் இன்று போராட்டம்

கொழும்பு, ஏப். 06

பல கோரிக்கைகளை முன்வைத்து நாட்டின் அனைத்து எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்களும் இன்று முற்பகல் 09. 30 மணி முதல் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு முன்னால் அமைதிப் போராட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளனர் என்று எரிபொருள் விநியோகஸ்தர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

எரிபொருள் விநியோகத்தின் போது பின்பற்றப்படும் ஒற்றை மற்றும் இரட்டை இலக்க முறைமையால் எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகளே இந்தப் போராட்டத்துக்கான பிரதான காரணம் என்று அந்தச் சங்கத்தின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் டி. வி. சாந்த சில்வா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில், இந்த நடைமுறையால் ஊழியர்கள் கடுமையாக அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

எரிபொருள் விலை சூத்திரத்தின்படி, பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய நிறுவனங்கள் 6 சதவீத இலாபத்தை பெற்றுக்கொள் கின்றன. எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு 3 சதவீத இலா பப் பங்கு வழங்கப்பட வேண் டும் என்ற போதிலும், கூட்டுத் தாபனத்தின் புதிய நிர்வாகத் தால் அது வெட்டப் பட்டுள்ளது.

அத்துடன், முன்பதிவு செய்யப்பட்ட டீசல் மற்றும் பெற்றோல் முறையாக வழங்கப் படாததால், எரிபொருள் நிரப்பு நிலையங்களை நடத்திச் செல்வதில் கடும் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (எ)

# பொலிஸ் சுற்றிவளைப்பில் ஒரே நாளில் 592 பேர் கைது

கொழும்பு, ஏப். 06

நாடளாவிய ரீதியில் சனிக்கிழமை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போது, 592 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு நேற்று தெரிவித்துள்ளது.

அத்துடன் 28,293 பேர் சோதனைக்கு உட்படுத்தப் பட்டதுடன், 04 பேர் குற்றங்களுடன் தொடர்புடைய மற்றும் நேரடியாக அடையாளம் காணப்பட்டனர்.

இதேநேரம், கைது செய்ய பிறப்பிக்கப்பட்ட பிடியாணைகளுக்கமைய 229 பேரும், திறந்த பிடியாணைகளுக்கமைய 121 பேரும் கைது செய்யப் பட்டனர்.

இதேவேளை, மதுபோதையில் வாகனம் செலுத்திய 142 பேரும், கவனக்குறைவாக வாகனம் செலுத்திய 77 பேரும் பொலிஸாரால் கைது செய் யப்பட்டனர்.

அத்துடன், பிற போக்குவரத்து குற்றங்களுக்காக 4,486 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# நெடுந்தீவு படகுச்சேவை தனியாரிடம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 06

நெடுந்தீவுக்கான கடற்போக்குவரத்து கடந்த வெள்ளிக்கிழமை தொடக் கம் தனியாரிடம் ஒப்ப டைக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவு - குறிகட்டுவான் இடையேயான சேவையில் ஈடுபடும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பொறுப்பிலுள்ள படகுகளில் ஒன்றான குமுதினி படகு திருத்த வேலை காரணமாக சேவையில் இல்லை.

இதேவேளை, வடதாரகை படகு திருத்த வேலைக்காக திருகோணமலையில் உள்ள நிலையில் நெடுந்தாரகை படகு திருத்த வேலைக்காக நெடுந்தீவில் உள்ளது. இதனால், உரிய படகு சேவைகள் இன்றி தீவு மக்கள் தவித்து வருகின் றனர். (எ-05)

# "உயிர்த்த ஞாயிறுதின தாக்குதல் ஊழல் அரசியலின் வெளிப்பாடு"

கொழும்பு, ஏப். 06

2019ஆம் ஆண்டு நடத்தப்பட்ட உயிர்த்த ஞாயிறுதின குண்டுத்தாக்குதலானது, இலங்கையின் மிகவும் மோசமான மற்றும் ஊழல் நிறைந்த அரசியலை வெளிச்சம் போட்டுக் காட்டிய ஒரு தருணமாகும். இத்தகைய கொடூரமான குற்றங்களை செய்பவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் தராதரம் பார்க்காமல் சட்டத்தின் முன் நிறுத்தி தண்டிக்கப்பட வேண்டும். அப்போதுதான் மக்களுக்கு பொறுப்புக்கூறக் கூடிய ஒரு உண்மையான அரசியல் சூழல் நாட்டில் உருவாகும் என்று கத்தோலிக்க திருச்சபையின் ஊடகப் பேச்சாளர் அருட்தந்தை ஜூட் கிருஷாந்த பெர்னாண்டோ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அநுரவின் ஆட்சியில் நம்பிக்கையில்லை!

## சஜித் தலைமையில் ஆட்சி கயந்த எம். பி. சூளுரை



கொழும்பு, ஏப். 06

அரசாங்கத்தை வீழ்த்தி ஆட்சியை கைப்பற்றும் சந்தர்ப்பத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் அரசாங்கத்தை அமைப்போம். ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவின் மீதும், அவர் தலைமையிலான அரசாங்கத்தின் மீதும் மக்கள் மத்தியில் நம்பிக்கையில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக தெரிவித்தார்.

மஹர பகுதியில் சனிக்கிழமை நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் தேசிய மக்கள் சக்தி குறிப்பிட்ட சகல விடயங்களும் இன்று பொய்யாக்கப்பட்டுள்ளது. பொய்களை குறிப்பிட்டு கொண்டு ஆட்சிக்கு வந்தார்கள்.

அதனால் மக்கள் இன்று துன்பப்படுகிறார்கள். அவர்கள் சுகபோகமாக வாழ்கிறார்கள். மத்திய கிழக்கு நாடுகளில் தீவிரமடைந்துள்ள போர்ச் சூழலுக்கு மத்தியில் இலங்கையின் வெளிவிவகார கொள்கை கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது. அதேபோல் தோற்றம் பெறும் நெருக்கடிகளை முகாமைத்துவம் செய்வதற்கும் எந்தவித திட்டங்களும் இன்றளவில் தயாரிக்கப்படவில்லை.

அரசாங்கத்தின் பலவீனமான நிர்வாகத்தால் தான் எரிபொருள் விலை தொடர்ச்சியாக உயர்வடைந்த நிலையில் காணப்படுகிறது. எதிர்வரும் மாதங்களில் மின்கட்டணமும் மீண்டும் உயர்வடையவுள்ளது. ஆகவே, அரசாங்கத்தின் பலவீனமான நிர்வாக முகாமைத்துவத்தின் ஒட்டுமொத்த சுமையும் மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ளது."-என்றார்.

(எ)

# புள்ளிமான் இறைச்சியுடன் குருநாகலில் இருவர் கைது




குருநாகல், ஏப். 06

புள்ளிமானை வேட்டையாடி, அதன் இறைச்சியை விற்பனை செய்ய முயன்ற இருவர் வனவிலங்கு துறை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர்.

நேற்று அதிகாலை கல்கமுவ கள பாதுகாப்பு அலுவலக அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து, முன்னெடுக்கப்பட்ட சோதனையின்போது, வேட்டையாடப்பட்டு துண்டு துண்டாக இறைச்சியாக்கப்பட்ட நிலையில் புள்ளிமான் ஒன்று மீட்கப்பட்டது.

சம்பவ இடத்தில் இருந்து மானின் இறைச்சி, தலை மற்றும் ஏனைய உறுப்புக்களுடன், வேட்டைக்கு பயன்படுத்தப்பட்ட அபாயகரமான ஆயுதங்களையும் அதிகாரிகள் கைப்பற்றினர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும், கைப்பற்றப்பட்ட சான்று பொருட்களுடன் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கல்கமுவ நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

(எ)

# மட்டு. சீயோன் தேவாலயத்தில் உயிர்த்த ஞாயிறுதின வழிபாடு



மட்டக்களப்பு, ஏப். 06

மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்தில் உயிர்த்த ஞாயிறுதின வழிபாடு ஆராதனைகள் நடைபெற்றன.

இயேசு பிரானின் தவக்காலத்தின் இறுதி விசேட தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பில் உள்ள கிறிஸ்தவ தேவாலயங்களில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை விசேட ஆராதனைகள் நடைபெற்றன.

இதன்போது கடந்த 2019 ஆம் ஆண்டு இதே தினத்தில் குண்டு வெடிப்பின் போது உயிரிழந்த உறவுகளின் ஆத்ம சாந்திக்காகவும் பாதிக்கப்பட்டவர்களுக்காகவும் விசேட நினைவஞ்சலி ஆராதனைகள் நடைபெற்றன.

இதேவேளை, தேவாலய வளாகத்தை சுற்றி பலத்த பாதுகாப்பும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த ஆராதனை வழிபாடுகளில் அதிகளவிலான மக்கள் கலந்து கொண்டனர்.

(எ)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஆட்சியை கவிழ்ப்பதற்கு எதிர்க்கட்சிகள் நாடகம்!

## பிரதி அமைச்சர் கமகெதர விசனம்

கொழும்பு, ஏப். 06

அரசாங்கத்தின் மக்கள் நலத் திட்டங்களைச் சகித்துக் கொள்ள முடியாமலும், ஊழல் குற்றச்சாட்டுகளில் இருந்து தங்களைத் தற்காத்துக் கொள்ளவும் எதிர்க்கட்சிகள் கைகோர்த்துச் சூழ்ச்சிகளில் ஈடுபட்டு வருவகின்றன என்று பௌத்த விவகாரங்களுக்கான பிரதி அமைச்சர் கமகெதர திஸநாயக்க தெரிவித்தார்.

நாட்டில் ஏற்படும் இயற்கைப்பேரிடர்கள் மற்றும் உலகளாவிய பொருளாதார நெருக்கடிகளைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தி, எவ்வாறேனும் ஆட்சியைக் கவிழ்க்க வேண்டும் என்ற குறுகிய நோக்குடன் முதிர்ச்சியற்ற முறையில் எதிர்க்கட்சிகள் நாடகமாடி வருகின்றன என்றும் அவர் கூறினார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில், "உலகில் எங்குமே இல்லாத அளவுக்கு மிகவும் முதிர்ச்சியற்ற மற்றும் சிறுபிள்ளைத்தனமான ஒரு எதிர்க்கட்சியே இலங்கையில் உள்ளது. முன்னதாக நாட்டில் ஏற்பட்ட இயற்கை பேரிடர்களின் போதும், தற்போதைய ஈரானியப் போர்ச் சூழல் காரணமாக உருவாகியுள்ள மற்றும் நாட்டின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட உலகளாவிய பொருளாதார நெருக்கடிகளின் போதும், அவற்றைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தி ஆட்சியைக் கவிழ்க்க எதிர்க்கட்சியினர் வழி தேடுகின்றனர்.

கடந்த காலங்களில், பாம்பும் கீரியும் போல் பரம எதிரிகளாகப் பிரிந்து செயல்பட்ட எதிர்க்கட்சியினர், இப்போது அரசாங்கத்தை வீழ்த்துவதற்காக ஒரே மேடையில் ஒன்றுகூடி நாடகமாடுகின்றனர்.

அரசாங்கத்தின் மக்கள் நலத் திட்டங்கள் வெற்றிகரமாக செயல்படுவதால் தங்களின் அரசியல் எதிர்காலம் மற்றும் இருப்பு கேள்விக்குறியாகிவிடும் என்ற பயமே எதிர்க்கட்சிகளின் இந்தத் திடீர் ஒற்றுமைக்குக் காரணமாகும். அரசாங்கத்தின் திட்டங்களுக்கு எதிராக அவர்கள் அனைவரும் இணைந்து வீதியில் இறங்கிப் போராடத் திட்டமிட்டு வருகின்றனர்.

அண்மையில் முன்னாள் அமைச்சர் ஒருவரால் புத்தகமொன்று வெளியிடப்பட்டது. அந்த நிகழ்வுக்கு அனைத்து எதிர்க்கட்சியினரையும் வரவழைத்து ஒரு பெரிய விந்தையான கண்டுபிடிப்பை நிகழ்த்தியது போன்ற மாயையை அவர் ஏற்படுத்தினார். இவை அனைத்தும் ஒரு நாடகமாகும்."- என்றார்.

(எ)

# 21,950 போதை மாத்திரைகளுடன் மூன்று சந்தேகநபர்கள் சிக்கினர்

குருநாகல், ஏப். 06

குருநாகல் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரெட்லண்ட்வத்த பகுதியில் 21, 950 போதை மாத்திரைகளுடன் மூன்று சந்தேகநபர்களை குருநாகல் விசேட அதிரடி படை பிரிவினர் நேற்று கைது செய்தனர்.

இதன்போது, 20 போதை மாத்திரைகள் மற்றும் ஒரு ஓட்டோ என்பன கைப்பற்றப்பட்டன. இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டு குருநாகல் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளுக்கமைய, வந்துராகல பகுதியில் 21, 930 போதை மாத்திரைகளுடன் மேலும் ஒரு சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர்கள் 24, 25 மற்றும் 45 வயதுடையவர்கள் எனவும், அவர்கள் பொதுஹெர மற்றும் வந்துராகல பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என வும் அடையாளம் காணப்பட்டனர்.

# மோட்டார் சைக்கிள் மரத்தில் மோதி விபத்து

## 23 வயது இளைஞன் பலி!

பொலநறுவை, ஏப். 06

தெஹியத்தகண்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொலநறுவை - மஹியங்கனை வீதியின் 41 ஆம் மைல்கல் பகுதியில் மோட்டார் சைக்கிள் ஒன்று மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் இளைஞன் ஒருவர் உயிரிழந்தார்.

சனிக்கிழமை இரவு, இந்தச் சம்பவம் பதிவானது. பொலநறுவை நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள், வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி அருகில் இருந்த மரமொன்றில் மோதியதில் இந்த விபத்து நேர்ந்தது.

இதன்போது, விபத்தில் பலத்த காயமடைந்த மோட்டார் சைக்கிள் சாரதி, தெஹியத்தகண்டி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட போதிலும், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

விபத்தில் உயிரிழந்தவர் சிறிபுர பகுதியைச் சேர்ந்த 23 வயது இளைஞன் என்று அடையாளம் காணப்பட்டார். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தெஹியத்தகண்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(எ)

# வெளிநாட்டு சிகரெட்களுடன் சீன பிரஜைகள் இருவர் கைது

கொழும்பு, ஏப். 06

36 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் பெறுமதியான சிகரெட்களை சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் கொண்டுவர முயன்ற இரண்டு சீனப் பிரஜைகள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையம் ஊடாக இந்த சிகரெட் தொகையை கடத்திச் செல்ல முயன்ற போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 23 மற்றும் 24 வயதுடைய சீனப் பிரஜைகள் என்று அடையாளம் காணப்பட்டனர். இவர்கள் நேற்று அதிகாலை 01: 10 மணிக்கு சீனாவின் குன்மிங் நகரிலிருந்து சீனா ஈஸ்டர்ன் விமான சேவைக்கு சொந்தமான விமானம் மூலம் இலங்கையை வந்தடைந்தனர்.

சந்தேகநபர்களிடமிருந்து 24, 200 சிகரெட்கள் அடங்கிய பொதிகள் கைப்பற்றப்பட்டன. கைது செய்யப்பட்ட இருவரையும் தடுத்து வைத்துள்ள கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகள், இது தொடர்பில் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

(எ)

# திருகோணமலையில் எறிகணை மீட்பு!



திருகோணமலை, ஏப். 06

திருகோணமலை - தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாலம்போட்டாறு பகுதியில் சிறிய வகை எறிகணை ஒன்று, நேற்று முன்தினம் மீட்கப் பட்டது.

இது தொடர்பில் விசாரணைகளை தம்பலகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# மலையகத்தில் களைகட்டிய உயிர்த்த ஞாயிறு வழிபாடுகள்



ஹற்றன், ஏப். 06

இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டு, மூன்றாம் நாள் மரணத்தை வென்று உயிர்த்தெழுந்ததை நினைவு கூரும் உயிர்த்த ஞாயிறு பெருவிழா, நேற்று மலையகப் பகுதிகளில் மிகுந்த பக்திப்பரவசத்துடன் கொண்டாடப்பட்டது.

இதனை முன்னிட்டு ஹற்றன் உள்ளிட்ட நுவரெலியா மாவட்டத்தில் உள்ள பிரதான தேவாலயங்களில் விசேட ஆராதனைகள் நடைபெற்றன.

ஹற்றன் புனித சிலுவை தேவாலயத்தில் தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் நடைபெற்ற பிரதான ஆராதனைகளுக்கு, திருத்தலப் பொறுப்பாளர் அருட்தந்தை எட்வின் ரொட்ரிகோ தலைமை தாங்கினார்.

இதேவேளை, நுவரெலியா புனித பிரான்சிஸ் சவேரியார் தேவாலயத்தில் நள்ளிரவு ஆராதனைகள் நடைபெற்றதுடன், நானுஓயா புனித ரீட்டா தேவாலயத்தில் பங்குத்தந்தை சற்குணராஜா தலைமையில் உயிர்த்த ஞாயிறு விசேட வழிபாடுகள் நடைபெற்றன.

இந்த விசேட திருப்பலிகளில் பெருமளவிலான கிறிஸ்தவர்கள் கலந்துகொண்டு வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

# ஊழலுக்கு சார்பானவர்கள் யார் வெள்ளிக்கிழமை தெரியவரும்!

## சானக எம். பி. தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 06

ஊழலை ஒழிப்பதாக குறிப்பிட்டு கொண்டு ஆட்சிக்கு வந்தவர்கள் தற்போது ஊழல் வாதிகளை பாதுகாக்கிறார்கள். வலுசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடிக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை எதிர்வரும் வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

ஊழலுக்கு எதிரானவர்கள் யார், ஊழலுக்கு சார்பானவர்கள் யார் என்பதை மக்கள் அன்று அறிந்துக் கொள்ளலாம் என்று சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் அம்பாந்தோட்டை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் டி.வி. சானக தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுஜன பெரமுனவின் தொகுதி அமைப்பாளர்களுடனான சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, "ஊழலை இல்லாதொழிப்பதாக குறிப்பிட்டு கொண்டு ஆட்சிக்கு வந்த அரசாங்கம் ஊழலை முன்னிலைப் படுத்தி செயல்படுகிறது. அமைச்சர்கள் தவறுகளை தெரிந்து செய்கிறார்களா? அல்லது தெரியாமல் செய்கிறார்களா? என்பது தெரியவில்லை. ஏதேனும் குறைகளை எதிர்க்கட்சிகள் சுட்டிக்காட்டியவுடன் இரகசியமாக குறைகளை திருத்தில் கொள்கிறார்கள். பின்னர் எதிர்க்கட்சியினரை விமர்சிக்கிறார்கள். நிலக்கரி கொள்வனவில் பாரியதொரு மோசடி இடம்பெற்றுள்ளது. புதிய நிறுவனத்துக்கு விலைமனுகோரல் வழங்கப்பட்டுள்ளது. தரமற்ற நிலக்கரியால் பாரிய விளைவுகள் ஏற்படும். இந்த விடயம் தொடர்பில் விடயதானத்துக்கு பொறுப்பான வலுசக்தி அமைச்சருடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட தயார்.

அவசர தேவைக்கான முறையான காரணிகள் ஏதும் இல்லாத வகையில் தரமற்ற வகையில் நிலக்கரி கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். முழு அமைச்சரவையும் எதிர்காலத்தில் சிறைச் செல்ல நேரிடும்."- என்றார்.

(எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## ஈஸ்டர் தாக்குதல்...

காயமடைந்தோர் மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்க வேண்டியது ஒரு நாட்டின் அடிப்படைப் பொறுப்பாகும்.

எனினும், கடந்த கால மற்றும் தற்போதைய அரசாங்கங்கள் இந்த விவகாரத்தில் பொறுப்புக்கூறத் தவறிவிட்டன என்பது ஒரு தேசியத் தோல்வி. உண்மையைக் கண்டறிவதும், நீதியை நிலைநாட்டுவதும் தவிர்க்க முடியாத ஒன்று. சட்டத்தின் ஆட்சி மற்றும் வெளிப்படைத்தன்மையை உறுதிப்படுத்துவதன் மூலமே இதனை அடைய முடியும்.

இவ்வாறானதொரு துயரம் மீண்டும் நிகழாதிருப்பதை உறுதி செய்ய, அனைத்து இன மற்றும் மதங்களுக்கிடையில் நம்பிக்கையையும் சமாதானத்தையும் கட்டியெழுப்புவது அவசியம்- என்றார். (அ)

## உயிர்த்த ஞாயிறு...

தெளிவாக அறிவித்துள்ளது.

இதன் பின்னரும் அவர்கள் ஊழல் பற்றி பேசுவது ஆச்சியரியமாக உள்ளது.

நடப்பு உலகளாவிய நிலைவரங்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தவேண்டும்.

மத்திய கிழக்கின் மோதல் நிலைமையை அரசாங்கம் என்ற ரீதியில் எம்மால் கட்டுப்படுத்த முடியாது.

அந்த மோதல்களால் ஏற்படும் நெருக்கடிகளை முகாமைத்துவம் செய்வதற்கு கூடிய அவதானம் செலுத்தவேண்டும்.

எரிபொருள் தட்டுப்பாட்டை முகாமைத்துவம் செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டுள்ளன.

உலகளாவிய ரீதியில் எரிபொருள் விநியோகத்தில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் மக்கள் கூட்டுப்பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

நெருக்கடி நிலைமையின்போது எரிபொருளை பதுக்கி வைத்து அவற்றை அதிக விலைக்கு விற்று பயனடைய வேண்டும் என்று நினைப்பது முற்றிலும் தவறானது.

நாடு என்ற ரீதியில் மாற்றமடைய வேண்டுமாயின் தனிநபரின் செயற்பாடுகள் மற்றும் சிந்தனைகளில் மாற்றம் ஏற்படவேண்டும்.

அனைத்தையும் எதிர்க்கும் எதிர்க்கட்சியினர் தான் இன்று உள்ளார்கள்.

உலகில் வேறெந்த நாடுகளிலும் இவ்வாறானதொரு எதிர்க்கட்சிகள் இல்லை. நாட்டை அழித்தாவது ஆட்சியை கைப்பற்றவே நினைக்கிறார்கள்.

பொய்யான குற்றச்சாட்டுக்களை தினசரி முன்வைக்கிறார்கள். ஏப்ரல் மாதத்துக்கு பின்னர் அரசாங்கம் நெருக்கடிக்குள்ளாகும். மக்கள் வீதிக்கு இறங்குவார்கள் என்று குறிப்பிட்டார்கள்.

இந்த மாதத்தில் அவர்களின் எண்ணம் நிறைவேறுமா என்பதை நானும் பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

அரசாங்கத்துக்கு எதிராக மக்கள் வீதிக்கு இறங்கமாட்டார்கள். மாறாக அரசாங்கத்தை பாதுகாக்கவே வீதிக்கு இறங்குவார்கள். மத்திய கிழக்கின் மோதல் நிலைமையால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது என்பதை நாங்கள் நன்கு அறிவோம். நெருக்கடி நிலைமையை முகாமைத்துவம் செய்வதற்கு உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம்.

மக்களை நெருக்கடிக்குள்ளாக்கி அதில் சுகபோகமாக வாழும் மனநிலை அரசாங்கத்தில் எவருக்கும் இல்லை.

ஏனெனில் இது மக்களாட்சி அரசாங்கம்.

உயிர்த்த ஞாயிறு தின குண்டுத்தாக்குதல்கள் சம்பவம் பற்றி முறையான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில் ஒருசில பிரதான சூத்திரதாரிகள், பிரதான சூத்திரதாரி யார்? என்பது பற்றி நூல் வெளியிடுகிறார்கள். நூல் வெளியீட்டு நிகழ்வுக்கு பல பிரதான சூத்திரதாரிகள் சென்றிருந்தார்கள். உண்மை வெகுவிரைவில் வெளிவரும்.

ஆகவே கலக்கமடைய தேவையில்லை.

அரசாங்கத்தின் மீது திட்டமிட்ட வகையில் குற்றச்சாட்டுக்கள், விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. இவற்றுக்கு நாங்கள் ஒருபோதும் ப்லவீனமடையமாட்டோம்.

ஏனெனில் பல ஆண்டுகாலமாக நாங்கள் இவ்வாறான விமர்சனங்களுக்கு முகங்கொடுத்துள்ளோம். ஆகவே விமர்சனங்களால் அரசாங்கத்தை எவராலும் வீழ்த்த முடியாது என்பதை தெளிவாக குறிப்பிட்டுக் கொள்கிறேன்.

அனைத்து இன மக்களையும் ஒன்றிணைத்து அரசாங்கத்தை உருவாக்கியுள்ளோம்.

நாட்டின் அடிப்படை பிரச்னைகளுக்கு நாங்கள் தீர்வு பெற்றுக்கொடுப்போம் - என்றார். (அ)

## எரிபொருள் கப்பலை...

திகதி ஆகியன தொடர்பில் இறுதி இணக்கப்பாடு எட்டப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## பல உலகத் தலைவர்கள்...

மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

கொழும்பு சென் லூசியஸ் தேவாலயத்தில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு விசேட ஆராதனையில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கிறிஸ்தவம் என்பது வெறும் சடங்குகளோ அல்லது போதகர்களால் உலகிற்குச் சொல்லப்படும் பிரசாரமோ அல்ல.

அது அன்பினால் நிறைந்த ஒரு உன்னதமான வாழ்க்கை முறை. கிறிஸ்து வாழ்ந்து காட்டிய நெறி என்பது அன்பின் சேவகனாக இருப்பதாகும்.

இறைவனுக்கு முன்பாகவும், சக மனிதர்களுக்கு முன்பாகவும் நேர்மையாகவும் நீதியோடும் வாழ்வதே உண்மையான ஆன்மீகமாகும்.

ஒரு தலைவன் என்பவன் அதிகாரத்தைச் செலுத்துபவன் அல்லன். அவன் ஒரு சேவகனாக இருக்க வேண்டும் என்பதே கிறிஸ்துவின் போதனையாகும்.

துரதிர்ஷ்டவசமாக, இன்று உலகை ஆளும் பல தலைவர்கள் சேவகர்களாக இல்லாமல், அதிகாரத்தை விரும்புபவர்களாகவும், சுயநலம் கொண்டவர்களாகவும் இருக்கிறார்கள்.

இத்தகைய தலைவர்களின் சிந்தனையில் அமைதியை விதைக்க நாம் இறைவனைப் பிரார்த்திக்க வேண்டும்- என்றார். (அ)

## எரிவாயு விலை...

2.3 கிலோ கிராம் நிறையுடைய சமையல் எரிவாயு கொள்கலனின் விலை 750 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி அதன் புதிய விலை 890 ரூபாவாகும்.

இதேவேளை, நேற்று நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் லாவ்ஸ் சமையல் எரிவாயுவின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி 12.5 கிலோ கிராம் நிறைக் கொண்ட சமையல் எரிவாயு கொள்கலனின் விலை 1,070 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதன் புதிய விலை 5,700 ரூபாய். 5 கிலோகிராம் நிறைக் கொண்ட சமையல் எரிவாயு கொள்கலனின் விலை 418 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது

இதன்படி அதன் புதிய 2,280 ரூபாய் என லாவ்ஸ் சமையல் எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது. (அ)

## சுகாதார அமைச்சரக்கு...

கலந்துரையாடுவதற்கு அமைச்சர் தயக்கம் காட்டுவதாகவும், அதன் காரணமாகவே இந்தப் போராட்ட நடவடிக்கை நீடிப்பதாகவும் அச்சங்கத்தின் செயலாளர் வைத்தியர் பிரபாத் சுகததாச தெரிவித்தார்.

அமைச்சரின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் தமது தொழிற்சங்க நடவடிக்கை குறித்த அடுத்த கட்ட தீர்மானத்தை எடுக்கத் தயாராக இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நோயாளிகளை அசௌகரியத்திற்கு உள்ளாக்க வேண்டாம் என்று நாம் ஏற்கனவே சுகாதார அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளோம்.

சுகாதார அமைச்சர் தீர்மானங்களை எடுக்கத் தயங்குவதாலேயே தற்போது நோயாளிகளுக்கான சிகிச்சை சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

அவர் பேச்சுவார்த்தை மேசைக்கு வரத் தயார் என அறிவித்தால், அந்த நிமிடத்திலிருந்தே தொழிற்சங்க நடவடிக்கையிலிருந்து விலகுவது குறித்து எம்மால் தீர்மானிக்க முடியும்.

அவர் முடிவுகளை எடுக்கத் தாமதித்தால் அதன் பாதிப்புகளை இந்நாட்டு நோயாளிகளே அனுபவிக்க வேண்டியிருக்கும்.

அதனால்தான் நாளை காலை 8 மணி வரை சுகாதார அமைச்சருக்கு அவசியமான தலையீட்டை மேற்கொள்ள அவகாசம் வழங்கியுள்ளோம்.

இது தொடர்பாக ஜனாதிபதிக்கும் நாம் தெரியப்படுத்தியுள்ளோம்.

இன்று காலை 8 மணிக்குள் அவர் இணக்கம் தெரிவித்தால், போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வருவதா? இல்லையா என்பதை எமது நிறைவேற்று சபை ஊடாகத் தீர்மானிக்க முடியும்-என்றார். (அ)

## புத்தாண்டு விசேட...

கொழும்பு மத்திய பஸ் நிலையத்திலிருந்து ஹற்றன், பதுளை, கண்டி, பண்டாரவளை, அனுராதபுரம், திருகோணமலை, யாழ்ப்பாணம், சிலாபம் மற்றும் புத்தளம் ஆகிய இடங்களுக்கு பஸ்கள் இயக்கப்படவுள்ளன.

காலி மற்றும் மாத்தறை ஆகிய இடங்களை மையப்படுத்தி, அதிவேக நெடுஞ்சாலைகள் ஊடாக விசேட போக்குவரத்து சேவைகளும் முன்னெடுக்கப்படவுள்ளன.

ரயில் திணைக்களமும் எதிர்வரும் வியாழக்கிழமை முதல் விசேட புத்தாண்டு சேவைகளை ஆரம்பிக்கவுள்ளது.

குறிப்பாக, கொழும்பு புறக்கோட்டையிலிருந்து காங்கேசன்துறை வரையான வடக்கு வழித்தட ரயில் சேவைகள் நீண்ட இடைவெளிக்குப் பிறகு எதிர்வரும் 9ஆம் திகதி மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளதாக ரயில்வே பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

இலங்கை வானூர்திப் படையின் உழைப்புப் பங்களிப்புடன், சுமார் 424 மில்லியன் ரூபா செலவில் புதுப்பிக்கப்பட்டுள்ள கொழும்பு மத்திய பஸ் நிலையம் எதிர்வரும் புதன்கிழமை காலை உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்படவுள்ளது.

இரண்டு முனையங்களைக் கொண்ட இந்த நிலையத்தில், தரைத்தளம் பேருந்து தரிப்பிடமாகவும், இரண்டாம் தளம் ஓட்டுநர் - நடத்துநர் ஓய்வறைகளாகவும், மூன்றாம் தளம் நிர்வாக அலுவலகங்களாகவும் நவீன வசதிகளுடன் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவும் அடுத்த வாரம் முதல் தனியார் பஸ்களுக்கான விசேட புத்தாண்டு போக்குவரத்துத் திட்டங்களைச் செயல்படுத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## சொத்து விவரம்...

அறிவுறுத்தியுள்ளது.

2015 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த விசாரணை நீண்டகாலமாகத் தாமதமடைந்துள்ளதைக் குறிப்பிட்ட ஆணைக்குழு, ஏப்ரல் 10 ஆம் திகதிக்கு மேல் மேலதிக காலம் வழங்கப்படமாட்டாது எனத் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது.

மகிந்த ராஜபக்ஷவைத் தவிர, ஏனைய பல முக்கிய அரசியல்வாதிகளுக்கும் கடந்த வியாழக்கிழமை இவ்வாறான அறிவித்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன. அவர்கள் 12 நாட்களுக்குள் தமது சொத்து விவரங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

புதிய ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி இந்த அறிவித்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன. குறித்த காலப்பகுதிக்குள் விவரங்களை வழங்கத் தவறும் பட்சத்தில் அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஆணைக்குழு எச்சரித்துள்ளது. (அ)

## 2500 மருத்துவர்களுக்கு...

தொழில்முறை வல்லுநர்களாலும் அருவருக்கத்தக்க ஒன்றாகப் பார்க்கப்படுகிறது. மருத்துவர்களின் கோரிக்கைகள் குறித்து எந்தவொரு கலந்துரையாடலையும் நடத்தாமல், அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்தி மருத்துவர்களை ஒடுக்கவும் அச்சுறுத்தவும் அமைச்சர் முயற்சிக்கிறார்.

அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ முதலில் தனது சொந்த மாவட்டமான களுத்துறையில் உள்ள சுகாதாரப் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும். களுத்துறை மாவட்டத்தின் முக்கிய மற்றும் பிரதேச வைத்தியசாலைகள் மிகவும் பரிதாபகரமான நிலையில் உள்ளன.

அவற்றில் சில வைத்தியசாலைகள் மூடப்பட்டும் கிடக்கின்றன. தனது சொந்த மாவட்டத்தின் அடிப்படைச் சுகாதார வசதிகளைக்கூட மேம்படுத்த முடியாத ஒருவர், அதிகாரத்தைப் பயன்படுத்தி மருத்துவர்களை ஒடுக்கப் பார்ப்பது அவரது நிர்வாகத் தோல்வியையே காட்டுகிறது.

நாட்டில் தற்போது சுமார் 2000 முதல் 2500 மருத்துவர்களுக்கான தட்டுப்பாடும், ஏறத்தாழ 1000 நிபுணத்துவ மருத்துவர்களுக்கான தட்டுப்பாடும் நிலவுகிறது.

இத்தகைய இக்கட்டான சூழ்நிலையிலும் கூட, மக்களுக்கான தேசிய சுகாதாரக் கொள்கை, மனிதவள முகாமைத்துவத்துக்கான ஆட்சேர்ப்பு மற்றும் இடமாற்றக் கொள்கைகள், மருந்து மற்றும் நுண்ணுயிர் எதிர்ப்பிகளுக்கான கொள்கை போன்ற எதையுமே உருவாக்கச் சுகாதார அமைச்சு தவறிவிட்டது.

தங்களுக்கு மிக அருகில் இருக்கும் தேசிய வைத்தியசாலைக்கு ஒரு நிரந்தர பிரதிப் பணிப்பாளரைக்கூட நியமிக்க முடியாத அளவுக்குச் சுகாதார அமைச்சு நிர்வாகக் குளறுபடிகளால் நிறைந்துள்ளது. அமைச்சரின் இத்தகைய நடவடிக்கைகள் இலவச சுகாதார சேவையை பாதுகாப்பதற்காக அல்ல, மாறாக சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு ஏற்ப நாட்டின் சுகாதாரத் துறையைத் தனியார்மயமாக்குவதற்கான ஒரு திட்டமிட்ட சதியின் ஆரம்பப் புள்ளியாகும்.

கிராமப்புற வைத்தியசாலைகளுக்குத் தேவையான வசதிகள் மற்றும் மருந்துகள் குறைக்கப்பட்டு, அவை படிப்படியாக மூடப்படும் நிலைக்குத் தள்ளப்படுகின்றன. இதன் மூலம் அரசாங்கமானது சுகாதார சேவைகளை ஒடுக்கி, மக்கள் பணம் செலுத்தி சிகிச்சை பெறும் தனியார் சுகாதாரச் சேவையை ஊக்குவிக்க முயற்சிக்கிறது-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu

# மண்முனையில் புதையல் தோண்டிய பிரதேச செயலக கணக்காளர் கைது!

## ஒய்வு பெற்ற இராணுவ வீரர் உட்பட ஒன்பது பேருக்கும் விளக்கமறியல்!

மட்டக்களப்பு, ஏப். 06

மட்டக்களப்பு, மண்முனை பகுதியில் புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டதாக கைது செய்யப்பட்ட மொறட்டுவை பிரதேச செயலகத்தின் பிரதம கணக்காளர், ஒய்வு பெற்ற இராணுவ வீரர் உட்பட 09 பேரை எதிர்வரும் 10ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மண்முனை பிரதான வீதியில், ஆலயம் ஒன்றுக்கு அருகிலுள்ள காணியில் புதையல் தோண்டும் நடவடிக்கை இடம்பெறுவதாக மட்டு. மாவட்ட குற்ற விசாரணை பிரிவு பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது.

இதனைத் தொடர்ந்து, மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில், மொறட்டுவை, கட்டுகஸ்தோட்டை மற்றும் இங்கிரியகொட ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 09 பேர் கைது செய்யப்பட்டனர். சம்பவ இடத்திலிருந்து பூஜை பொருட்களும் மீட்கப்பட்டு காத்தான்குடி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டன.

இதனையடுத்து, கைது செய்யப்பட்டவர்கள் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டபோது, அவர்களை எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார். (எ)

---

### கண்டியில் கோர விபத்து:

# சிகிச்சை பெற்றுவந்த மாணவனும் மரணம்!

கண்டி, ஏப். 06

கண்டியில் நடைபெற்று வரும் வருடாந்த கிரிக்கெட் போட்டியை பார்வையிடச் சென்றபோது இடம்பெற்ற விபத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்று வந்த மாணவனும் உயிரிழந்தார். இந்த விபத்தில் ஏற்கனவே ஒரு மாணவன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

கண்டி புனித சில்வெஸ்டர் கல்லூரிக்கும், கண்டி வித்தியார்த்த கல்லூரிக்குமிடையே நடைபெறும் வருடாந்த கிரிக்கெட் போட்டியைப் பார்வையிடுவதற்காக, சில்வெஸ்டர் கல்லூரி மாணவர்கள் இருவர் மோட்டார் சைக்கிளில் பயணித்தனர். இதன்போது எதிரே வந்த பஸ்ஸுடன் மோதி இந்த விபத்து நேர்ந்தது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒரு மாணவன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததுடன், மற்றைய மாணவர் கண்டி தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி நேற்று ஞாயிற்றுக் கிழமை உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர். உயர்தர மாணவர்கள் இருவரே இவ்வாறு விபத்தில் சிக்கி உயிரிழந்தனர். (எ)

---

### விவசாயிகளுக்கு உரம் விநியோகிக்க

# விடுமுறை, வார இறுதி நாட்களில் கமநல சேவை நிலையம் திறப்பு

கொழும்பு, ஏப். 06

சிறுபோக நெற் செய்கை நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ள பிரதேசத்தில் விவசாயிகளுக்கு உரத்தை முறையாக விநியோகிப்பதற்கு சகல விடுமுறை தினங்கள் மற்றும் வார இறுதி நாட்களில் குறித்த பிரதேசத்தில் உள்ள கமநல சேவை மத்திய நிலையத்தை திறந்து வைப்பதற்கு கமநல அபிவிருத்தி திணைக்களம் தீர்மானித்துள்ளது.

மத்திய கிழக்கில் நிலவும் மோதல் நிலைமையால் உர விநியோகத்துக்கு ஏற்படக்கூடிய பாதிப்பு, தடை மற்றும் பல்வேறு தரப்பினால் உரத்தை பதுக்கி வைத்தல் உள்ளிட்ட காரணிகளால் நெற் செய்கைக்கு தேவைக்கான உரத்தை கமநல சேவை மத்திய நிலையம் ஊடாக மாத்திரம் விநியோகிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கமைய சிறுபோகத்தில் நெற் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ள பிரதேசங்களில் கமநல சேவை மத்திய நிலையம் ஊடாக உரம் விநியோகிக்கப்படும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கமநல சேவை மத்திய நிலையம் ஊடாக 50 கிலோகிராம் யூரியா உரம் 9900 -10,200 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

---

# அதிக விலைக்கு குடிநீர் விற்ற உணவகம் ஒன்று முற்றுகை!

கண்டி, ஏப். 06

நிர்ணயிக்கப்பட்ட கட்டுப்பாட்டு விலையை விட அதிக விலைக்கு போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீரை விற்பனை செய்த கண்டியிலுள்ள உணவகம் ஒன்று நுகர்வோர் விவகார அதிகார சபையால் முற்றுகையிடப்பட்டது.

1977 என்ற நுகர்வோர் அவசர அழைப்பு இலக்கத்துக்கு கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைய, கண்டி மாவட்ட விசாரணை அதிகாரிகளால் இந்தச் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

விலைக் கட்டுப்பாட்டு விதிமுறைகளை மீறியமைக்காக குறித்த உணவகத்துக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதுபோன்ற விலைக் குறைபாடுகள் அல்லது விதிமீறல்கள் இடம்பெறும் பட்சத்தில், 1977 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்பு கொண்டு முறைப்பாடுகளை செய்யுமாறு நுகர்வோர் விவகார அதிகார சபை பொது மக்களை கேட்டுக்கொண்டுள்ளது. (எ)

---

# காட்டு யானை தாக்கி நான்கு பேர் உயிரிழப்பு

கொழும்பு, ஏப். 06

நாட்டின் பல பகுதிகளில் இடம்பெற்ற காட்டு யானை தாக்குதல்களில் நான்கு பேர் உயிரிழந்தனர்.

அநுராதபுரம் - எப்பாவல, கெலேஅமுணுகொலய பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற காட்டு யானை தாக்குதலில் இருவர் உயிரிழந்தனர்.

அத்துடன், அநுராதபுரம் - ஹூரிகஸ்வெவ பகுதியிலும் நேற்று முன்தினம் இரவு காட்டு யானை தாக்கி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

இதேவேளை, மொனராகலை -தனமல்வில பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற மற்றுமொரு காட்டு யானை தாக்குதல் சம்பவத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்தார். (எ)

---

# மான் மோதி விபத்து: பெண் ஒருவர் காயம்

திருகோணமலை, ஏப். 06

திருகோணமலை, சீனக்குடா பகுதியில் மோட்டார் சைக்கிள் மீது மான் பாய்ந்து விபத்துக்குள்ளானதில் பெண் ஒருவர் பலத்த காயமடைந்தார்.

கிண்ணியாவிலிருந்து திருகோணமலை நோக்கி சனிக்கிழமை மாலை மோட்டார் சைக்கிள் ஒன்று பயணித்துக்கொண்டிருந்தது. இதில் ஒரு தம்பதியினரும் அவர்களது குழந்தையும் பயணித்தனர். இவர்கள் திருகோணமலை, பாலையூற்றில் உள்ள பெண்ணின் தாய் வீட்டுக்குச் சென்றுகொண்டிருந்த போதே இந்த அனர்த்தம் நிகழ்ந்தது.

சீனக்குடா வளைவுப் பகுதியில் மோட்டார் சைக்கிள் சென்றுகொண்டிருந்த போது, எதிர்பாராத விதமாக மான் ஒன்று குறுக்கே பாய்ந்தது. இதனால், கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் பலத்த காயமடைந்த பெண், உடனடியாக திருகோணமலை பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அவர் கிண்ணியா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டு, அங்குள்ள அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார். (எ)

---

# செங்கலடி நகருக்குள் ஊடுருவிய யானையால் கடைக்கு சேதம்!



மட்டக்களப்பு, ஏப். 06

மட்டக்களப்பு- செங்கலடி பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை, காட்டு யானை ஒன்று நகருக்குள் நுழைந்து கடை ஒன்றை சேதப்படுத்தியது.

செங்கலடி கறுத்த பாலம் வழியாக நகருக்குள் வந்த யானை, விவசாயப் பொருட்கள் விற்பனை செய்யும் கடை ஒன்றை உடைத்து அங்கிருந்த அரிசி மூடைகளை சேதப்படுத்தியது.

மேலும், அப்பகுதியில் உள்ள மதில்கள், தென்னை மரங்கள் மற்றும் வாழைகளையும் சேதப்படுத்தியது.

கடந்த சில தினங்களாக கறுத்த பாலம் பகுதியில் தங்கியிருந்த இந்த யானை, சம்பவ தினமான நேற்று அதிகாலை செங்கலடி - பதுளை வீதியூடாக நகருக்குள் நுழைந்ததாக கூறப்படுகிறது. பின்னர், அப்பகுதி மக்கள் இணைந்து யானையை விரட்டியடித்தனர்.

இந்தச் சம்பவத்தால் அப்பகுதி மக்கள் பெரும் அச்சத்தில் உள்ளனர்.

மேலும், மாவட்டத்தில் அண்மைக்காலமாக காட்டு யானைகள் குடியிருப்பு பகுதிகளுக்குள் நுழையும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. குறிப்பாக வவுணதீவு, ஆயித்தியமலை, கரடியனாறு, கொக்கட்டிச்சோலை மற்றும் வெல்லாவெளி பிரதேச செயலகப் பிரிவுகளில் யானை தாக்கி பலர் உயிரிழந்ததுடன், கிராம மக்கள் தினமும் அச்சத்துடன் இரவு நேரத்தை கழித்து வருகின்றனர். (எ)

---

# காணாமல் போன மாணவன் நேற்று காலை சடலமாக மீட்பு

நோர்வூட், ஏப். 06

கெசல்கமுவ ஆற்றில் நீராடச் சென்றபோது நீரில் மூழ்கி காணாமல் போயிருந்த பாடசாலை மாணவனின் சடலம் நேற்று ஞாயிற்றுக் கிழமை காலை மீட்கப்பட்டது. நோர்வூட் பொலிஸார் வழங்கிய தகவலின்படி, குறித்த ஆற்றின் “சில்வர் வாலா” பகுதியின் ஆழமான இடத்திலிருந்து சடலம் மீட்கப்பட்டது.

இந்தத் தேடுதல் நடவடிக்கைக்காக கொழும்பு துறைமுக ரங்கல கடற்படை முகாமின் கடற்படை சுழியோடிகளின் உதவி பெறப்பட்டிருந்தது.

இவ்வாறு நீரில் மூழ்கி உயிரிழந்தவர் நோர்வூட் பகுதியைச் சேர்ந்த, 11 ஆம் தரத்தில் கல்வி கற்று வந்த மாணவராவார்.

சனிக்கிழமை மாலை தனது நண்பர்கள் 11 பேருடன் இணைந்து, காசல்ரீ நீர்த்தேக்கத்துக்கு பிரதானமாக நீர் பாயும் கெசல்கமுவ ஆற்றின் “சில்வர் வாலா” பகுதியில் நீராடிக்கொண்டிருந்த போதே குறித்த மாணவன் நீரில் மூழ்கிக் காணாமல் போனார்.

காணாமல் போன மாணவனை தேடும் பணியில் நோர்வூட் பொலிஸாரும் பிரதேசவாசிகளும் தீவிரமாக ஈடுபட்டனர். எனினும், அந்தப் பகுதி மிகவும் ஆழமானது என்பதால், மேலதிக தேடுதல் நடவடிக்கைகளுக்காக கடற்படையினரின் ஒத்துழைப்பை நோர்வூட் பொலிஸார் கோரியிருந்தனர். இந்த நிலையிலேயே நேற்று சடலம் மீட்கப்பட்டது. (எ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 06.04.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media